செ.வெ.எண்: 50 நாள்:26.09.2020

# பத்திரிக்கை செய்தி

## இலவச வெறிநோய் தடுப்பூசி முகாம் 28.09.2020 அன்று நடைபெறவுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன் இ.ஆ.ப., அவர்கள் தகவல்

விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கு பரவும் வெறிநோயை தடுத்திடும் விதமாக செப்டம்பர் 28ம் தேதி உலக வெறிநோய் தடுப்பு தினமாக கொண்டாடப்படுகிறது. அதனை முன்னிட்டு 2020ம் ஆண்டு உலக வெறிநோய் தடுப்பு தினத்தினை கொண்டாடும் விதமாக கரூர் மாவட்ட பிராணிகள் துயர் தடுப்பு சங்கம் மற்றும் கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை மூலம் இணைந்து நடத்தப்படும் செல்லப்பிராணிகள் மற்றும் தெருநாய்களுக்கான இலவச வெறிநோய் தடுப்பூசி முகாம் 28.09.2020 திங்கட்கிழமை அன்று காலை 8.00 மணி முதல் 12.00 மணி வரை கரூர், கொளந்தாகவுண்டனூர் பகுதியில் உள்ள கால்நடை பிரதம மருத்துவமனை, ஆத்தூர், காணியாளம்பட்டி கால்நடை மருந்துவமனைகள் மற்றும் கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடை மருந்தக வளாகத்தில் நடைபெற உள்ளது.

வெறிநாய்க்கடி நோய் அல்லது ரேபிஸ் என்பது வெறிநோய் பாதிக்கப்பட்ட நாய் மற்றும் விலங்குகள் போன்றவை மனிதர்கள் மற்றும் விலங்குகளை கடிப்பதன் மூலம் பரவும் ஒரு கொடிய தொற்று நோயாகும். நாய் மற்றும் பூனைகளுக்கு வெறிநோய் தடுப்பூசியை அதன் 3 மாத வயதிலும், பிறகு வருடத்திற்கு ஒருமுறை ஊக்கத் தடுப்பூசியாகவும் போட வேண்டும்.

மேலும், தற்போதைய கொரோனா பெருந்தொற்று காரணத்தால் முகக்கவசம் அணிந்து கொண்டு தனிமனித இடைவெளியுடன் பொதுமக்கள் அனைவரும் தவறாமல் இந்த இலவச வெறிநோய் தடுப்பூசி முகாமில் கலந்து கொண்டு தங்களது நாய் மற்றும் பூனைகளுக்கு தடுப்பூசி போட்டு கொண்டு அவற்றை வெறிநோய் தாக்கத்திலிருந்து பாதுகாத்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன் இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.